SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள்
அமுதப் பெருவிழா


**<u>சுருக்கம்</u>**

**கூட்டுறவு – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் விதி 110-இன் கீழ் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் பயிர்க் கடன் தள்ளுபடி இரசீது வழங்குதல் - மறு பயிர்க் கடன் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.**


---

**<u>கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(சிசி1)த் துறை</u>**

அரசாணை (நிலை) எண்.50

நாள்: 29.04.2022
சுபகிருது வருடம், சித்திரை – 16
திருவள்ளுவர் ஆண்டு, 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.15 மற்றும் 16, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 08.02.2021.
2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பு நாள் 07.01.2022.
3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடித எண் 6666/2021 வேகதி 2, நாள் 12.01.2022.

-------------

**<u>ஆணை:</u>**

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைகளில், கூட்டுறவு நிறுவனங்களில் 31.01.2021 அன்று நிலுவையில் இருந்த 16,43,347 விவசாயிகளின் ரூ.12,110.74 கோடி அளவிலான பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்தும், அக்கடன் தள்ளுபடித் திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கியும் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. பார்வை 2-ல் படிக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் பயிர்க் கடன் தள்ளுபடி இரசீது வழங்குவது குறித்தும் அவர்களுக்கு மறு பயிர்க் கடன் வழங்குவது குறித்தும் அறிவிப்பினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் 07.01.2022 அன்று வெளியிட்டுள்ளார்.

...2....

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக, சில தெளிவுரைகள் வழங்குமாறு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசினை கோரியுள்ளார்.

4. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, கீழ்க்கண்டவாறு தெளிவுரை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(i) சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் விதிமீறல்களுக்குட்பட்டு கடன் வழங்குதல், இனி நடைபெறா வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை உறுதி செய்து, இந்நிகழ்வினை சிறப்பினமாக கருதி, விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி சான்று வழங்கப்படும். இதனால், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள 51,017 விவசாயிகளுக்கு ரூ.501.69 கோடி அளவிற்கு பயிர்கடன் தள்ளுபடி வழங்கப்படும். மேலும், நடப்பாண்டில் மீண்டும் பயிர்கடன் வழக்கம் போல தொடர்ந்து வழங்கப்படும் என்ற முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்றத்தில் விதி 110-இன் கீழ் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மட்டும் 51,017 விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்யப்பட்ட ரூ.501.69 கோடி கடன்களுக்கான தள்ளுபடி சான்றிதழ்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு பதிவாளர் அளவிலேயே அறிவுரை வழங்கிட அனுமதி வழங்கப்படுகிறது.

(ii) இது தொடர்பாக அரசுக்கு எந்தவிதமான கூடுதல் நிதிச்செலவினமும் ஏற்படாது என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

(iii) பயிர்கடன் தள்ளுபடியை செயலாக்குவதில் ஏற்பட்டுள்ள விதிமீறல்களை கண்டறியும் பொருட்டு, அயல்மாவட்ட அலுவலர்களை கொண்டு 100% மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதற்கான ஆய்வறிக்கை மற்றும் தவறிழைத்தவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை அரசுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(iv) விவசாயிகளுக்கு விதிமீறல்களுக்கு உட்பட்டு கடன்கள் வழங்கிய அதிகாரிகள் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்ட விபரத்தினை அரசுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்..

(v) தற்போது வரை பயிர்கடன் தள்ளுபடி குறித்து பெறப்பட்ட தணிக்கை அறிக்கையினை சமர்ப்பிக்கப்படவேண்டும். முறைகேடாக வழங்கப்பட்ட தள்ளுபடி தொகை குறித்த விபரங்களும் தெரிவிக்கப்படவேண்டும்.

....3/-

5. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா. எண்.18438/நிதி (கூ,உ(ம)நு.பா)த் துறை) நாள்: 22.04.2022-இல் பெற்ற ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை 600 010.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
சம்பளக் கணக்கு அலுவலர், சம்பளக் கணக்கு அலுவலகம்
(தெற்கு), சென்னை – 35.
கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை 600 035.

நகல்:
முதன்மைப் பொது மேலாளர், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD), சென்னை-34.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை-1.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, சென்னை-1.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
கூடுதல் தலைமைச் செயலாளர் (நிதி) அவர்களின் தனிச்செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
நிதி (கூ,உ(ம)நு.பா)த் துறை, சென்னை-9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (அநமு2 / சிஜி) த்துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.